தமிழ்
மருத்துவப் பொழில்

திங்கள் வெளியீடு

மலர் 2	ஜூன் 1942	இதழ் 6

சுதேசவைத்தியர்களும் ரிஜிஸ்டரேஷனும்

1933ம் வருடம் இந்திய மருத்துவ பாடசாலை பட்டதாரிகளும் இந்திய மருத்துவஞ்செய்யும் 'சுதேச வைத்தியர்களும்' ரிஜிஸ்டர் செய்துகொள்ள வேண்டுமென்றும் அவர்கள் 'ரிஜிஸ்டர்டு ப்ராக்டீஷனர் ஆப் இண்டியன் மெடிஸன்' (பதிவு செய்த இந்திய மருத்துவர்) என அழைக்கப்படுவரென்றும் ஓர் உத்தரவு (G. O. 231 P. H. dated 1-2-1933) சர்க்காரால் பிறப்பிக்கப்பட்டது. அப்போது இம்மாகாணத்தில் சுமார் 21,000 மருத்துவர்கள் பதிவுசெய்துகொள்வார்களென்று சர்க்காரால் ஊகிக்கப்பட்டது. ஆனால், அம்மருத்துவர்களை B வகுப்பில் பதிவு செய்ததால், எதிர்பார்த்தவாறு அநேகர் சீக்கிரத்தில் பதிவு செய்துகொள்ளவில்லை. ஆகையால், சர்க்கார் பல விளம்பரங்களையும் அறிக்கைகளையும் வெளியிட்டனர். பதிவுசெய்துகொள்ளவேண்டிய காலத்தையும் நீடித்துவைத்தனர். இவ்வளவு செய்தும் 11,833 பேர்கள் தான் பதிவு செய்துகொண்டனர். இப்படியிருக்க, 1941ம் வருடம் ஜூன் மாதம், எங்ஙனம் இத்தனை பேர்களைப் பதிவுசெய்யக்கூடும்? என்று Central Board of Indian Medicineயை வினவி, அச்செயலுக்கு சட்டப்படி நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும் என்றும் மருட்டினர். அதற்கேற்றபதில் சர்க்காருக்கு கிடைத்திருக்கும். அதைப்பற்றி நாம் இப்போது கவனிக்க வேண்டிய

தில்லை. ஆனால், 1942 ம் ஆண்டு ஜூன் மாதம் 8 ந் தேதி வெளிவந்த சர்க்கார் அறிக்கை அதன் விளைவா யிருக்கலாமென்று எவரும் ஊகிக்கலாம்.

அவ்வறிக்கையில் 1914 ம் ஆண்டு மருத்துவச் சட்டப்படி ஆங்கில முறை வைத்தியர்கள் 'மெடிகல் பிராக்டிஷனர்' என்று கூறிக்கொள்வதாலும் இந்திய மருத்துவர்கள் 'மெடிகல் பிராக்டிஷனர் ஆப் இண்டியன் மெடிஸன்' என்று கூறிக்கொள்வதாலும் குழப்பம் ஏற்படுகிறதென்றும் அதை ஒழிக்க இந்திய மருத்துவர்களை 'சென்ட்ரல் போர்டு ஆப் இண்டியன் மெடிஸன் வாக்குரிமையாளர்' (Member of the electral roll of Central Board of Indian Medicine and so on) என்று அழைக்கலாம் என்றும் அதற்கு நம்முடைய கருத்துக்களை சர்க்கார் சுகாதார இலாக்கா காரியதரிசிக்கு ஜூலை முதல் தேதிக்குள் தெரிவித்துக் கொள்ளவேண்டுமென்று மிருந்தது. பிறகு அத்தேதியை ஆகஸ்டு முதல் தேதிக்குத் தள்ளிவைத்தனர். அவ்வறிக்கையைப்பற்றி கீழ் ஆராய்வாம்.

'ரிஜிஸ்டர்டு மெடிகல் பிராக்டிஷனர்' என்றால் ஆங்கில முறை வைத்தியர்களையும், ரிஜிஸ்டர்டு மெடிகல் பிராக்டிஷனர் ஆப் இண்டியன் மெடிஸன்' என்றால் இந்திய மருத்துவர்களையும் குறிக்கின்றன. இப்பெயர்களில் எவ்வளவு வேற்றுமையுளது. படிக்கத் தெரியாதவர்களுக்குக்கூட குழப்பமுண்டாக இடமில்லை. எவருக்குக் குழப்பமுண்டாயிற்று என்று அவ்வறிக்கையும் கூறவில்லை. இக்குழப்பத்தைப்பற்றி இத்தனை வருடங்களாக எவரும் புகார் செய்யவில்லை. (ஆனால் ரிஜிஷ்ட்ரேஷன் மட்டும் கூடாதென்று சொன்னார்கள்) இப்படியிருக்க, இக்குழப்பம் எந்த அறிவாளர்க்கு உண்டாயிற்றோ நாமறியேம். சர்க்காருக்கும் தெரியாதென்றே எண்ணுகிறோம். இப்படிப்பட்ட அறிவாளிக்கு ஆங்கிலத்தைச் சரியாக போதித்துவைக்க வசதி செய்வதை விட்டு, ஒன்பதாண்டுகளாக பழக்கத்திலிருந்துவரும் சர்க்கார் உத்தரவை ரத்துசெய்து, பன்னீராயிரம் பேர்களை பாதிக்கச் செய்வது நன்றோ? நீதியோ? கட்டளைபணம் ரூபாய் பதினைந்து கட்டியது வாக்குரிமையாளராவதற்கா? அல்லது அங்ஙனம் அழைக்கப்படவா? அல்ல! அல்ல! ஆங்கிலமுறை வைதியர்களுக்குள்ள சலுகைகளையும் உரிமைகளையும் தாம் பெறுவதற்கே அக்கட்டளையைக் கட்டிப் பதிவு செய்துகொண்டனர். 1933 ம் ஆண்டு இட்ட உத்தரவுக்கு மாறி நடக்க எண்ணுவது நீதியாகுமோ? இந்த விபரீத புத்தி தோன்றிய

தெக்காரணமோ? நாம் அறியோம். இந்திய மருத்துவம் பிடியாத சில அதிகாரிகளிடம் நம் இலாக்கா ஒப்படைத்திருப்பதுதான் இவ்வளவு தகராறுகளுக்கும் காரணமாகும். இவர்களிடம் அதிகாரம் இன்று இருக்கும்; நாளை போய்விடும். இவர்களைப்பற்றிக் கவலை வேண்டாம். இவர்களுக்கெல்லாம் மேம்பட்ட அதிகாரிகள் பொது மக்கள். அவர்களில் பெரும்பாலோர் நம்மை ஆதரிக்கின்றனர். அதை இந்திய சர்க்காரும் உணர்ந்துள்ளது. அவர்களின் ஆதரவை இன்னும் அதிகமாகப் பெற முயலவேண்டும்.

சண்டையின் நிமித்தம் ஆங்கில வைத்தியர்கள் போருக்கு அழைத்துச் செல்லப்படுவார்களேயானால் பொதுமக்கள் - பெரும்பாலருக்கு மட்டுமல்ல - யாவருக்கும் சேவை செய்ய வழியுண்டாகும். அப்போது அவர்கள் எல்லோரின் ஆதரவையும் நாம் பெறுவோம். அப்பொதுமக்களின் சௌகரியத்தைக் கண்ணும் கருத்துமாக பாதுகத்துவரும் சென்னை கவர்னர் அவர்களுக்கு நகர் L. I. M. சங்கம் 1942 ஜூன் மாதம் ஓர் விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளது. அதை அவர் கவனித்து சுகாதார இலாக்கா உத்தியோகஸ்தர்கள் நமக்கு இனி இன்னல்களைச் செய்யாதவாறு காப்பாரென்றே நம்புகிறோம். அதற்கு ஒரே ஒரு வழியுண்டு. அது நமது இலாக்காவை இந்திய மருத்துவத்தின் மேன்மையை உணர்ந்த வேறு அதிகாரிகளிடம் ஒப்படைப்பதுதான்.

சென்னை
மாகாண சித்த மருத்துவ மாநாடு

சென்னை மாகாண சித்தவைத்திய மாநாடு கும்பகோணத்தில் 28-6-42 ல் டாக்டர் G. A. சின்னு F. C. E. (மதுரை) அவர்களின் தலைமையில் கூடிற்று. அம்மாநாட்டை திரு. ப. நாடிமுத்து பிள்ளை M. L. A. கொடக்கிவைத்தார். அங்கு கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. டாக்டர் P. V. கிருஷ்ணராவை இந்திய மருத்துவப் பாடசாலைக்குத் தலைவராக அமைத்ததற்குத் தங்கள் சந்தோஷத்தைத் தெரிவிப்பதுடன் அவரையே அப்பதவியில் ஊர்ஜிதப்படுத்தும்படி இம்மாநாடு அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்கிறது.

2. வைத்தியரத்தினம் G. ஸ்ரீநிவாசமூர்த்தியவர்கள் இந்திய மருத்துவத்திற்காக செய்துவந்த அரும் சேவையைப் பாராட்டுகிறது.

3. இந்திய மருத்துவத்திற்குப் பலவிதங்களிலும் உதவிபுரிந்து வரும் தஞ்சை ஜில்லாபோர்டாரை ஒரு இந்திய மருத்துவ பாடசாலையைத் தொடக்கி நடத்திவரும்படி இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

4. முன்பிருந்தபடியே இந்திய மருத்துவப் பாடசாலையில் படித்து தேர்ச்சிப்பெற்றவர்களை தணிக்கி உத்தியோகஸ்தர்களாக (இன்ஸ்பெக்ஷன் ஆபீசர்களாக) அமைக்கும்படி அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்கிறது.

5. ஜில்லா மெடிகல் ஆபீசர்களால் தணிக்கை (Inspection) செய்யும் தற்போதிய முறை இந்திய மருத்துவ வளர்ச்சிக்கு முக்காலும் இடையூறாக விருக்கின்றதென இக்கூட்டம் எண்ணுகிறது.

6. ஜில்லா, கிராம (Local and Rural) வைத்தியசாலைகளில் வேலைசெய்யும் ஆங்கில வைத்திய பயிற்சிபெற்ற வைத்தியர்கள் சண்டைக்காக மாற்றப்பட்டதால், அவ்விடங்களில் இந்திய மருத்துவப் பாடசாலையில் படித்து தேர்ச்சி யடைந்தவர்களை அமைக்கும்படி கேட்கிறது.

7. ஆங்கில வைத்திய மெடிகல் கவுன்சிலுக்குள்ள அதிகாரம், சலுகைகள் முதலியவை இந்திய மருத்துவ போர்டுக்கும் அளிக்கும்படி அரசாங்கத்தாருக்குத் தெரிவித்துக்கொள்கிறது.

8. பல தலைமுறைகளாகப் பொதுமக்களுக்குச் சேவை செய்து வந்ததும், அவர்களால் ஆதரிக்கப்பட்டதுமான இந்திய மருத்துவத்திற்குப் போதுமான வசதி, ஊக்கங்களை அரசாங்கத்தார் கொடுக்க வேண்டும். அங்ஙனம் கொடுக்க மறுப்பது தம் நெறியிலிருந்து அவர்கள் தவறுவதாகுமென்பதை வணக்கத்துடன் இக்கூட்டம் தெரிவித்துக்கொள்ளுகிறது.

9. இன்னும் பதிவு செய்துகொள்ளாதிருக்கும் வைத்தியர்களை 1-2-33 தேதி G. O. No. 231 P. H. படி பதிவுசெய்துகொள்வதற்காக, பதிவுசெய்யவேண்டிய காலத்தை இன்னும் நீடித்துவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறது.

10. 1942-43 வருடத்திற்கு கீழ்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

1. திரு. R. M. K. வேலுசாமி பிள்ளை தலைவர்.
2. திரு. P. கோவிந்த பிள்ளை உபதலைவர்
3. திரு. T. M. நாராயணசாமி ஐயர் காரியதரிசி

(அடுத்த பக்கம் பார்க்க)

தாரை

கோ. துரைராசன்

(86 ம் பக்கத் தொடர்ச்சி)

ஆட்கள் :—நன்றாகத் தேர்ந்த ஆட்கள் ஏழு பேரை சர்வாங்க தாரைசெய்ய அமைக்கவேண்டும். அவர்கள் இச்சிகிச்சையைநன்றாய்ப் படித்தும் செய்யும்போது கவனமாய்ப் பலமுறை பார்த்து மிருக்க வேண்டும். அன்றியும் பொறுமை, சாந்தம், பட்சம், தயையுள்ளவர் களாயுமிருப்பது அவசியமாகும். வேறுவித தாரைகளைச் செய்ய மூன்று ஆட்கள் போதும்.

வைத்தியர் ;— இவர் நல்ல படிப்பும் பழக்கமு முள்ளவரா யிருக்கவேண்டும். இவர் இல்லாது சிகிச்சையைத் தொடங்கக்கூடாது. தாரை செய்யும்போதும், பிறகும் நோயாளியைச் சர்க்கிரதையாய் இவர் கவனித்து வரவேண்டும். இவர் நோயாளியின் உணவு, மருந்து, தேகப்பயிற்சி இவைகளைச் சரிவர அமைக்க வேண்டும்.

தாரைக்கு வேண்டிய இதர உகவிப் பொருள்கள் :-(1) தலையணை (2) தலையைச்சுற்றிக் கட்ட கட்டைவிரல் கனமான துணி வத்தி, (3) எட்டு அங்குல சச்சதுரமான துணிகள் பல, (4) உடம்பைத் துடைப்பதற்கு இரண்டு குட்டைகள், (5) தாரை திரவம் (6) துரோணியிலிருந்து ஒழுகும் தாரை திரவத்தைப் பிடித்துத் தாரை சட்டியில்விட இரண்டு சிறு சட்டிகள், (7) வைத்தியரும் மற்ற ஆட்களும் உட்கார இடங்கள், (8) கடிகையாரம், (9) தலைக்கு வேண்டிய தைலம் வைக்கவும், உடலுக்கு வேண்டிய எண்ணெய் வைக்கவும் இரு

(92 ம் பக்கத் தொடர்ச்சி)

(Managing Committee) காரியகமிட்டி அங்கத்தினர்கள்

1.	திரு.	குழந்தைவேலு பிள்ளை	கும்பகோணம்
2.	,,	நாராயணசாமி ஐயர்	சீர்காழி
3.	,,	தக்ஷிணாமூர்த்தி பிள்ளை	திருத்துறைப்பூண்டி
4.	,,	வேலுசாமி பிள்ளை	பழனி
5.	,,	சிவபிரகாசம் பிள்ளை	நாகப்பட்டணம்
6.	,,	சின்னுசாமி நாயுடு	மதுரை
7.	;.	சாமிநாத பிள்ளை	பாபநாசம்
8.	,,	சுப்பிரமணிய பிள்ளை	மாயவரம்
9.	,,	சுப்பிரமணியம் A.	திருவண்ணாமலை
10	,,	பழனியாண்டி பிள்ளை	திருச்சி
11	,,	கந்தசாமி பிள்ளை	திருப்பூவனம்

சட்டிகள், (10) நெல்லிமுள்ளியிட்டு காய்ச்சியாறிய நீர், (11) அரைப்புக்கு பச்சைப்பயறு மா, (12) குளித்தபிறகு தலைக்குத் தூவ வேண்டியசூரணம், (13) தாரைக்குப் பிறகு எடுத்துக்கொள்ளவேண்டிய மருந்து, (14) தக்க உணவு, (15) சந்தோஷமாயிருக்கவும், இன்பமாய்த் தூங்கவும் நல்ல அறைகள்.

மேற்குறிப்பிட்ட பொருள்கள் யாவும் சரிவர இருக்கின்றனவா என்று சிகிச்சை தொடங்குவதற்குமுன் வைத்தியர் பார்த்துக் கொள்ள வேண்டும். அவைகளில் சிறிது தவறு உண்டானபோதிலும் நோயாளிக்கு நன்மை உண்டாவதற்குப் பதிலாகத் தீமையுண்டாகுமென அறிக.

மிருதுவான துணிகளைத் தலையணைமாதிரி மடித்துப் பெரிய வார்மையிலையால் மூடியோ அல்லது கித்தான் (Oil cloth) பையுள் திணித்தோ தலையணையாக உபயோகிக்கலாம். அதன் அகலம், உயரம் முதலியன நோயாளியின் சௌக்கியத்திற்கு ஏற்றவாறு யிருக்க வேண்டும்.

போதுமான அகலநீளமுள்ள மிருதுவான துணியை எடுத்து கட்டைவிரல் கனமாக முறுக்கிப் புருவங்களுக்கு மீது வரும்படி தலையில் முடியவேண்டும். அம்முடி பக்கத்தில் (காதுக்குமேல்) வருவது நன்று. நெற்றியின் மீதிருக்கும்படியான பாகத்தை மட்டும் முன்னதாகவே தாரை திரவத்தில் நனைத்துக்கொள்ளவேண்டும். இங்ஙனம் வத்தியைக் கட்டுவது தலைக்கு உபயோகிக்கும்படியான திரவம் கண்களில் படாமலும் உடலுக்கு உபயோகிக்கும்படியான எண்ணெயுடன் கலக்காமலு மிருப்பதற்கேயாம்.

தலைக்கு உபயோகிக்கும்படியான எண்ணெயை தோஷம், நோய் நோயளியின் பிரக்ருதி இவைகளுக்குத் தக்கவாறு தயாரிக்கவேண்டும் சுத்தமாயும், சற்றும் ஈரமில்லாததாயுமுள்ள பாத்திரத்தில் தைலத்தை யூற்றி ஒதமில்லாத யிடத்தில் வைக்கவேண்டும். பிருங்காமலகம், மஞ்சிஷ்டாதி, அஸன வில்வாதி, திரிபலாதி, சந்தனாதி, துங்கதூர்வாதி, பலாசிந்திலாதி, பலாமடக்கு முதலிய தைலங்கள் தான் அநேகமாகத் தலைக்குத் தாரையாக உபயோகப்படுபவை.

உடலுக்கு உபயோகப்படும் தைலங்களையும் முன்கூறியவாறே தோஷமுதலியவைகளுக்குத் தக்கவாறு தயாரித்து சாக்கிரதையாய் வைக்கவேண்டும். பிண்டத்தைலம், தன்வந்திரி, சுத்தபலா, பலாமடக்கு, பிரபஞ்சன விமர்த்தனம், அரக்கு, பலாஅசுவகந்தி முதலிய தைலங்கள்தான் உடலுக்கு அநேகமாக உபயோகப்படும். முன்கூறியவாறு இளஞ்சூடாக சுடவைத்தே உடலுக்கு உபயோகிக்கவேண்டும். (தலைக்கு உபயோகிப்பதை சுடவைக்க வேண்டியதில்லை) ஆறிவிட்டால் நீர்யந்திரத்தில் மறுபடியும் சுடவைத்துக்கொள்ளவேண்டும்.

தாரை நீர் :— முன்னாள் கொதிக்கவைத்து ஆறவைக்கவேண்டும் ஒருபிரஸ்தம் நீருக்கு ஒரு தோலா நெல்லிமுள்ளி சேர்த்துக்கொதிக்க வைத்து நாலில் ஒன்றாகச் சுண்டவைக்கவேண்டும். ஆறுமுதல் பத்து பிரஸ்தம் நீர் ஒருவருடைய தாரைக்கு வேண்டும். பித்தப்பிரக்ருதிகளுக்கும், பித்தம் பிரகோப மடைந்தவர்களுக்கும் வெட்டிவேர், தேற்றான்கொட்டை முதலியன யிட்டுக் காய்ச்சிய நீர் நன்று. சதா சளிப்பினால் பீடிக்கப்பட்டவர்களுக்கு மூங்கில் இலை அல்லது மிளகு போட்டுக் காய்ச்சிய நீர் நன்மை தரும். வாதபிரகோபமடைந்த காலத்து சிற்றாமுட்டியும், கபம் பிரகோபமடைந்த காலத்து கடுக்காயும் சேர்த்துக் காய்ச்சலாம்.

உடலுக்கு நீர் :— சாதாரணமாக வாதஹர செய்கையுள்ள ஆமணக்கு, சிற்றாமுட்டி, நொச்சி, எருக்குத்தழைகள் யிட்டுக் கொதிக்கவைத்து ஆறியநீர் உடலுக்கு உபயோகப்படும்.

தலைத்தூவவேண்டிய பொடி :— சிற்றரத்தையாதி சூரணம், சாதாரணமாக உபயோகிக்கப்படும். பித்தாதிக்க முள்ளவர்களுக்கு கர்சூராதிசூரணம் அல்லது மஞ்சிஷ்டாதி சூரணம் நன்று. சில சமயங்களில் நெல்லி, மிளகு சூரணங்களைக் கலந்து உபயோகிக்கலாம்

அகமருந்து :— காலையில் மலத்தைப்போக்கி, பசியைத்தூண்ட ஆமணக்காதி (Gandharvasthadi) குடிநீரைக் கொடுக்க வேண்டும். ஆனால் பித்தாதிக்கத்தில் திராக்ஷை, கடுக்காய்க் கியாழத்தை உபயோகிக்கவேண்டும். மாலையில் இராசனாதி, தசமூலாதி, தன்வந்திராதி கியாழங்களில் ஒன்றை வாதக்ஷீணத்திற்கும் நோயாளியின் தன்மைக்கும் ஏற்றவாறு உபயோகிக்கலாம்.

தாரை செய்யுங்காலத்தில் தினந்தோறும் இவைகளைக் கொடுக்க வேண்டும். தாரைசெய்து முடிந்தபிறகும் மருந்துகளை நிறுத்தாது முன்கொடுத்த நாட்களுக்கு இரட்டிப்புநாட்கள் கொடுக்கவேண்டும்.

(தொடரும்)

நோய்ப்பெயர் வரலாறு

Dr. N. சுப்பிரமணியம், L. I. M.
(Member, Central Board of Indian Medieine)

(88ம் பக்கத் தொடர்ச்சி)

அணுச்செறிந்த நிலனும், அந்நிலத்தின் ஓங்கிய ஆகாயமும் அவ்வாகாயத்தைத் தடவிவரும் காற்றும், அக்காற்றின்கண் தலைப் பட்ட தீயும், அத்தீயோடு மாறுபட்ட நீருமென ஐவகைப்பட்ட பெரிய பூதத்தின் தன்மையாம்.

நிலம் வலிது. அது செறிதலைக் குணமாக வுடைத்து. நீர் தண்ணிது. அது நெகிழ்தலைக் குணமாக வுடைத்து. தீ வெய்து. அது தெறுதலைக் குணமாக வுடைத்து. வளி உளரும். அது ஓரிடத்தும் நிலைபெற்று நிற்பதன்று. வானம் ஓங்கி நிலவும். அது ஒருரு வுண்டில்லையன்று.

வான் ஒரு பயனுடைத்து. அது ஓசை. காற்று இரு பயனுடைத்து. சிறப்புப் பண்பு ஊறு. அதனுடன் ஓசை. தீ மூன்று பயனுடைத்து. சிறப்புப்பண்பு உருபு. அதனுடன் ஓசை, ஊறு. நீர் நான்கு பயனுடைத்து. சிறப்புப்பண்பு சுவை. அதனுடன் ஓசை, ஊறு, உருபு. மண் ஐந்து பயனுடைத்து. சிறப்புப்பண்பு நாற்றம். அதனுடன் மற்ற நான்கும்.

ஐம்பூதங்கள் இயற்கைத் தன்மை மாறுது உடலாய் அமைதல்

ஐம்பூதத்தன்மை பரிணமித்து மெய் ஆயிற்று. காற்று உடம்பாயும் நீர் வாயாயும், தீக் கண்ணாயும், மண் மூக்காயும், ஆகாயம் செவியாயும் நிற்பனவாம்.

காற்றால் உடம்பு ஊறாயும், நீரால் வாய் சுவையாயும், தீயாற் கண் ஒளியாயும், மண்ணால் மூக்கு நாற்றமாயும், வானாற் செவி ஒலியாயும் அமைந்து புற்கலமாகிய உடம்பு விளங்குவதாகும்.

மெய் வாய் கண் மூக்குச் செவியெனப் பேர்பெற்ற
வை வாயுமாய வற்றின் மீதடுத்துத் — துய்ய
சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்கா
லவைமுதற் புற்கலமாம். — இசைநுணுக்கம்.

என்ற பாட்டு மேற்கூறியதை விளக்கும்.

உடலில் ஐம்பூதத் தொகுதிகள்

உரமடி மேதினி யுந்தி யிலப்பாம்
விரவியதன் மூலை மேவிய கீழங்கி
கருமூலைமீ மிசை கைக்கீழிற்காலாம்
விரவிய சுந்தர மேல் வெளியாமே. -- திருமூலர்.

குறங்கு வரைத்திண்மை பொருந்திய கால்கள் மண் கூறு. அதன்மேல் கொப்பூழ்வரை அப்பின் கூறு. அதன்மேல் முலையின் நடுவரை அங்கியின் கூறு. நடு முலைக்குமேல் தோள்மட்டம்வரை காற்றின் கூறு. கழுத்தின்மேல் ஆகாயக் கூறாகும்.

உடலில் ஐம்பூதப் பொருள்கள்

மண்ணின் பகுதி: நரம்பு, இறைச்சி, என்பு, மயிர், தோல், என ஐந்து.
நீரின் பகுதி: நீர், மூளை, சுக்கிலம், நிணம், உதிரம், என ஐந்து.
தீயின் பகுதி: பசி, சோம்பு, மைதுனம், காட்சி, நீர், வேட்கை என ஐந்து
காற்றின் பகுதி: போக்கு, வரவு, நோய், கும்பித்தல், பரிசம் என ஐந்து.
வானின் பகுதி: வெகுளி, மதம், மானம், ஆங்காரம், உலோபம் என ஐந்து

மேற்கோள் (கடைசி மூன்றுக்கும்)

பசி சோம்பு மைதுனம் காட்சி, நீர்வேட்கை
தெசிகின்ற தீக்குணமோ ரைந்து — மொசிகின்ற
போக்கு வரவு நோய்க்கும் பித்தன் மெய்ப்பரிசம்
வாக்குடைய காற்றின் வகை.

ஓங்கு வெகுளி மதமான மாங்கார
நீங்கா வுலோபமுட னிவ்வைந்தும் — யாங்காய
வண்ண முலை மடவாய் வானகத்தின் கூறென்று
ரெண்ணி மிக நாலுணர்ந்தோ ரெண். - இசை நுணுக்கம்.

ஆகப் பூதகுணம் 25ம் கொண்டது உடம்பு.

ஐம்பூதக்கூடு இருபாற் சேர்க்கையாலானது

ஐம்பூதத் தன்மைகள் ஆண் பெண் சேர்க்கை காரணமாக மெய்ப் படுவதால், உடல் அவ்விருவிதத் தன்மைகளையும் தொகை வகையாகப் பொருந்தியே காணப்படுகிறது. ஆண் பெண் சேர்ந்த ஒட்டுக்களே மக்கள் வுடலங்கள்.

ஒட்டுமாமரம் இருவித மரங்களை ஒட்டி வளர்ப்பதால் உண்டானது. ஒட்டுமாம்பழம் ஒருபாகம் இனிப்பும் ஒருபாகம் புளிப்புமாக இருவேறு சுவைச் சேர்க்கையும், ஒருபாகம் நாருண்மையும் ஒரு பாகம் நாரின்மையுமாக இருவேறு உருவச்சேர்க்கையும் உடையதாகிறது. இதற்கு அப்பழத்தின் தாய் தந்தையாகிய இருவேறு வகைகளின் சேர்க்கையே காரணமாகிறது.

நாடியும் நாளமும் நவில் இள என்பும்
வெள்ளை நீரும் வெள்ளிய பற்களும்
தலைமயிர் நகமும் தந்தையின் கூறும்
சிறிய குடலும் சிவப்பு நீரும்
மருவிய கொழுப்பும் மன்னு மீரலும்
நுவல் நுரை யீரலும் நோக்கு மிதயமும்
தசையும் நிணமும் தாயின் கூறும். — உடல்நூல்.

உடற்றன்மையை ஆழ்ந்து கவனித்தால் வலப்பாகம் ஆண் தன்மையும் இடப்பாகம் பெண் தன்மையும் பொருந்தி யுள்ளதை யுணரலாம். வலப்பாகம் வன்மையும் இடப்பாகம் மென்மையும் உள்ளது. வலப்பாகம் உடலுக்கு ஆக்கத்தைத் தரும் தன்மையுள்ள கல்லீரலும் இடப்பாகம் உடலுக்குக் காத்தலைத்தரும் தன்மையுள்ள குருதிப் பொறியும் அமைந்திருக்கின்றன.

மக்களுக்கு வலப்பாகத்தைப் பற்றிய நோய் வலிமை பெறும் என்றும் அதற்குத் தீர்வு அரிதாகும் என்றும் இடப்பாகத்தைப் பற்றிய நோய்க்குத் தீர்வு எளிதாகும் என்றும் சித்தற் நூல் கூறும். பக்கவாத நோய் ஆண்களை வலப்பாகத்திலே பற்றினல் தீர்க்க அரிது என்பர். இடபாகத்தைப் பற்றினல் எளிது என்பர்.

இவ்வாறு உருவத்தாலும் ஆற்றலாலும் ஒருபால் ஆணும் ஒருபால் பெண்ணுமாக ஒட்டிச் சேர்ந்துள்ள உடம்புகளை இயங்கு திணைப் பொருட்களிலும் நிலைத்திணைப் பொருட்களினும் நாம் காண்கிறோம். இவ்விதம் தானும் தன் தையலுமாய்ப் பரவிகிற்குந் தன்மையைச் சித்தர்கள் உணர்ந்து பரம்பொருளை அம்மை அப்பனுக அர்த்தனரீஸ்வரனுகச் சிந்தித்து வணங்கினர்.

" The father-mother conception of God is a striking feature of South Indian Saivism. The right half of the figure is masculine and left feminine " என்றார் பல சமயங்களையும் கரை கண்ட ஒரு பெரியார்.

மாதொரு பாகன் என்ற சமய உண்மையையும் உடல் ஆண் பெண் ஒட்டுத்தன்மை என்ற வைத்திய உண்மையையும் கண்டறிவித்த பெருமை தமிழ்நாட்டுச் சித்தர்களுக்கே உரித்து.

இக்கருத்தை ஒட்டியேதான் நாடி பார்த்தலில் ஆண்களுக்கு வலது கையிலும் பெண்களுக்கு இடது கையிலும் தொட்டுணர்வதென அமைந்தது. (தொடரும்)

(100ம் பக்கத் தொடர்ச்சி)

சுரக்கிரகணி, அதிசார நோய்களுக்கு இலவங்கப்பட்டை சூரணம் ஏலக்காய் சூரணம் தேன் இவை மூன்றும் முறையே $\frac{1}{8}$, $\frac{1}{4}$, 1 வராகனெடை வீதம் சேர்த்ததிலும்;

இரத்த பித்தம், பிரதர ரோகம், பெரும்பாட்டுக்கு ஆடாதோடை தேன் ஒவ்வொன்றும் மும்மூன்று வராகனெடை வீதம் சேர்த்து அதிலும் கொடுக்கத் தீரும்.

5. குதிரை மூத்திரத்தில் சுத்தித்த நீலத்தை ஒரு கலயத்தில் போட்டு அதில் ஓரிலைத்தாமரைச் சாறுவிட்டு அதில் மூன்று மணி நேரம் ஊறவிட்டு பின் உலையிலிட்டு $1\frac{1}{2}$ மணி நேரம் ஊதியெடுக்கப் பற்பமாம்.

நீலமணி

Dr. R. தியாகராஜன், L. I. M.

நவமணிகளுள் ஒன்ருகிய நீலமணியின் நிறம் இருளைத் தெளிய வைத்தாலனையது. இதனை "இருடெளித்தனையவும்" என்ற சிலப்பதிகாரவடியால் அறியலாம். மற்றும் நிறத்தினுல் நீலமணி நால் வகைச் சாதியாக வழங்கும். அவையாவன: வெண்மை, செம்மை, பொன்மை, கருமை வன்னமுடையதாகும். இவை முறையே பிரம்ம க்ஷத்திரிய, வைசிய சூத்திரர் என்னும் நான்கு வகுப்பாகி அந்நான்கு வருணத்தவருக்கே உரித்தாம் எனவும் கூறப்படும். இதனை,

"நீலத்தியல்பு நிறுக்குங்காலை
நால்வகை வருணமும் நண்ணுமாகரமுங்
குணம்பதி ஞென்றுங் குறையிரு நான்கு
மணிவோர் செயலு மறிந்தி சினேரே
வெள்ளை சிவப்புப் பச்சை கருமையென்
றெண்ணிய நாற்குலத்தி லங்கிய நிறமே"

என்று சிலப்பதிகாரத்தில் அடியார்க்கு நல்லார் எடுத்துக்காட்டிய உதாரணங்களினுல் அறியலாம். ஈதன்றியும் நீலமணியை இந்திரநீலம், மாநீலம் எனவும் கூறுவர். இதனை "உந்தவாழ்வார் வலன்கண்" எனவும் "அவை சிதறும்" எனவும் திருவிளையாடல் புராணத்திற் காட்டிய செய்யுட்களாலும் அறியலாம்.

வடநூல்களில் நீர்நீலமென்றும் இந்திர நீலமென்றும் இருவகை குறிப்பிடப்பட்டுள்ளது. அவற்றில் இந்திரநீலம் சிறந்தது.

நீலத்திற்குப் பதினேரு குணங்கள் உள என்று அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரையில் மேற்கோள் காட்டி யிருக்கின்ருர். அதனைக் கீழ்க்காண்க.

"கோகுலக்கழுத்துக் குவளை சுரும்ப
ராகுலக்கண் களவிரிச்சாறு
காயாநெய்தல் கனத்தல் பத்தி
பாய்தலெனக்குணம் பதினென்ருமே"

நீலமணிக்குச் குற்றம் எட்டிருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது. அதனை வந்தவழிக் காண்க.

நீலத்தின் குணம்

"குதிவலிமே கம்பித்தம் கூறரியபாண்டு
மதிமயக்கம் எல்லாம் மருளும் — மதிநுதலே
புத்தியொடு மென்மேலும் போக சுகம் உண்டாகும்
சுத்தநறும் நீலத்தாற் சொல்"

—

(போ-ள்) நீலமணி குதிகால் வலி, மேகம், பித்தம், பாண்டு, புத்திமயக்கம் முதலிய நோய்களைப் போக்குவதுடன், நுட்பமான அறிவை வளர்ப்பதுடன் போக சுகத்தையும் உண்டுபண்ணும்.

நீலத்தின் சுத்தி

1. கழுதை மூத்திரத்தில் போட்டு ஊரவைத்து ஒருநாள் வெய்யிலில் வைத்துப் பிறகு சுத்த நீரில் கழுவியெடுக்கச் சுத்தியாம்.

2. நெருப்பில் காய்ச்சி எருக்கம் பாலில் தோய்த்து ஆறியபின் இவ்விதமே மேலும் மடக்கி மடக்கி 5 அல்லது 6 முறை செய்யச் சுத்தியாம்.

3. குதிரை மூத்திரத்தில் ஒருநாள் ஊறவைத்துக் கழுவி வெய்யிலில் உலர்த்தச் சுத்தியாம்.

நீல நீறு

1. மேற்படியாகச் சுத்தித்த நீலத்தை பருத்தியிலைச் சாற்றில் 12 மணி நேரம் ஊறவைத்து பிறகு கருமான் உலையிலிட்டூத நீறும்.

2. சுத்தித்த நீலத்தை தேட்கொடுக்கிலைக் கற்கத்தில் 12 மணி நேரம் சூரியபுடமிட்டு பிறகு குகையிலிட்டு மூடி, ஊதி, ஆறியபின்பு எடுக்க பற்பமாகும்.

3. அகத்தியர் வைத்திய நவநீதத்தில் கீழ்க்கண்ட பற்பமுறையும் அனுபானப் பிணிநீக்கமும் கூறப்பட்டிருக்கின்றன.

நீலம் வராகனெடை ஒன்றுக்கு எருக்கம்பால் பலம் மூன்று கற்றாழைச்சாறு பலம் ஆறு இவ்விரண்டையும் ஒன்றுகூட்டி ஒரு கலையத்திலிட்டு அதில் நீலத்தைப்போட்டு சில்லிட்டுச் சீலைசெய்து எழுபது வரட்டியில் புடமிட பற்பமாம். பற்பமாகாவிடின் மறுபடியும் முன்போலவே புடமிடவும்.

அளவு: ¼ முதல் 1 குன்றியெடை.

தீரும் நோயும் அனுபானமும்:— கீல்வாயு, முடக்குவாயு, பக்ஷவாதம் முதலிய நோய்களுக்கு மைசாட்சி சூரணம் வராகனெடை ¼ தேன் வராகனெடை ¼ சேர்த்து அதிலும்;

இரண்டு, மூன்று, நான்காம் முறை சுரங்களுக்குத் துளசிச் சாறு 3 வராகனெடை மிளகுச்சூரணம் ⅛ விராகனெடை சேர்த்ததிலும்;

சுரக்கட்டிக்கும் (மண்ணீரல்), ஈரல் (கல்லீரல்) வீக்கத்திற்கும் மணத்தக்காளிச்சாறு வராகனெடை 3 சேர்த்ததிலும்;

கண்ணொளி விர்த்தியாக கரிசாலைச்சாறு தேன் ஒவ்வொன்றும் மும்மூன்று வராகனெடை சேர்த்ததிலும்;

(98ம் பக்கம் பார்க்க)